செ.வெ.எண்: 53 நாள்:28.01.2018

## திருநெல்வேலி மாவட்டம் கடைநல்லூர் நகராட்சி பகுதியில் 500 பணியாளர்களை கொண்டு நடைபெற்ற மெகா தூய்மை மற்றும் கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வீடு வீடாக சென்று ஆய்வு மேற்கொண்டார்.

திருநெல்வேலி மாவட்டம் கடையநல்லூர் நகராட்சியில் 32 வது வார்டு ரகுமாணியாபுரம் 22வது வார்டு இந்திரா நகர், 4வது வார்டு வெரியன் கோயில் தெரு, 8 வது வார்டு முத்தாரம்மன் கோயில் தெரு, 28 வது வார்டு பேட்டை, 29 வது வார்டு மதினா நகர், 30வது வார்டு ரைஸ்மில் தெரு,31 வது வார்டு காதர் மொகைதீன் பள்ளி தெரு,ஆகிய வார்டு பகுதியில் உள்ள 60 க்கு மேற்பட்ட தெருக்களில் இன்று (28.01.2018) மெகா தூய்மை,கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும் இப்பகுதியில் சிறப்பு மருத்துவ முகாம்களையும் பார்வையிட்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் கடையநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் காய்ச்சல் பாதிப்புள்ள வார்டு பகுதிகளில் தினசரி கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ளவும் நகராட்சி ஆணையாளர் இப்பகுதியில் தினசரி ஆய்வு மேற்கொள்ள வேண்டுமெனவும் உத்தரவிட்டார். மேலும் கூடுதல் பணியாளர்கள் நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறும். கல்லூரி மற்றும் தொண்டு நிறுவனங்களை கொண்டு விழிப்புணர்வு பணிகளை அதிக அளவில் மேற்கொள்ள வேண்டுமெனவும், குடிநீர் சீராக வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தேவைப்படும் தெருக்களில் புதிய குப்பை தொட்டிகளை அதிக அளவில் வைக்க வேண்டுமெனவும் உத்தரவிட்டார். மேலும் அருகில் உள்ள மற்ற நகராட்சியில் இருந்து கூடுதல் பணியாளர்களை வரவழைத்து துப்புரவு மற்றும் கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டுமென உத்தரவிட்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருநெல்வேலி மாவட்டம் கடையநல்லூர் நகராட்சி பகுதியில் இன்று 246 கொசு ஒழிப்பு பணியாளர்கள், 170 க்கு மேற்பட்ட துப்புரவு பணியாளர்கள், 40க்கு மேற்பட்ட சுகாதார அலுவலர்கள் உள்ளிட்ட பணியாளர்களை கொண்டு காய்ச்சல் பாதிப்புள்ள பகுதிகளில் தூய்மை மற்றும் கொசு ஒழிப்பு பணிகள் இன்று மேற்கொள்ளப்பட்டது. இப்பணிகளை ஆய்வு செய்ய மாவட்ட வருவாய் அலுவலர், சார் ஆட்சியர், வருவாய் கோட்டாட்சியர்கள் மற்றும் துணை ஆட்சியர்கள் தலைமையிலான குழுக்கள் அமைக்கப்பட்டு பணிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் வீடு வீடாக சென்று ஆய்வு செய்யப்பட்டது. பொதுமக்கள் குடிநீரை கொசுக்கள் புகாத வகையில் இருக்கமாக மூடி வைக்க வேண்டும் கொசு ஒழிப்பு பணியாளர்கள் வீடுகளுக்கு ஆய்வு செய்ய வருகையிலும், கொசு புழு ஒழிப்பு நடவடிக்கையில் விழிப்புணர்வுடன் முழு ஒத்தழைப்பு அளிக்க வேண்டும். மேலும் குப்பைகளை நகராட்சி துப்புரவு பணியாளர்களிடம் கொடுக்க வேண்டும். கால்வாய், சாக்கடைகளில் உள்ளிட்ட பகுதிகளில் குப்பைகளை கொட்ட கூடாது. சுகாதார பணிகள் தொடர்பான அரசின் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்தழைப்பு அளிக்க வேண்டுமென தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் திரு. முத்துராமலிங்கம், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு. ஆகாஷ் இ.ஆ.ப, வருவாய் கோட்டாட்சியர்கள் (திருநெல்வேலி) திருமதி மைதிலி, (தென்காசி) திரு.ராஜேந்திரன், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி, சுகாதார பணிகள்துணை இயக்குநர் மரு.சோமசுந்தரம், துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி லட்சுமிபிரியா கடையநல்லூர் நகராட்சி ஆணையர் (பொ) திரு.பவுன்ராஜ், கடையநல்லூர் வட்டாட்சியர் திரு.மாரியப்பன், மற்றும் சுகாதார அலுவலர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் ,திருநெல்வேலி